தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 189/ந/2022
நாள் 08.11.2022

திரு. A.சாமிநாதன்,
தாரமங்கலம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
தாரமங்கலம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம், தெற்கு ரதவீதி, கதவு எண் 18 A என்ற முகவரியில் வசிக்கும் திரு. A.சாமிநாதன் என்பவரின் 14.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2022 அன்று பெறப்பட்டு 189/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம், தெற்கு ரதவீதி, கதவு எண் 18 A என்ற முகவரியில் வசிக்கும் திரு. A.சாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"I am the complainant herein. I have land with Building in S.No. 159/3B2 near Tharamangalam – Kurukkupatty lake. The building leased out for the Textile export business to One Chawala Export. There are 100 workers doing tailoring and export works in the garments. It is classified as Commercial area situated in Junction Main Road. Near my land the name of the place East Bhavadi area. It is classified as Residential Area. There are more than 60 houses and more than 200 people are residing in the place in S.No.159/3A. The people are all engaged in handloom and powerloom and textile business. In front of the east of my land, the water sources area Tharamangalam – Kurkuputty lake in S.No.159/6. On the south of my land, adjacent to the lake, in S.No.159/7 belongs to the Tharamangalam Municipality.

In that S.No.159/7 land, there is a Government Primary Health Centre is functioning in Municipality land. Surrounding people are being treated at the said Health Medical Center. Near there is a new constructed drinking Water Over head tank in the Municipality land in S.No.159/7.

Very adjacent in S.No.159/5 there is Ganesha Temple by name Sarkarai Vinayagar where many people come and worship daily.

The north of my land in S.No.159/2, the government employees are working in the Government Agriculture and Horticulture Center.

Our wells and bore wells are dependent only on the Tharamangalam – Kurkuputty lake east of our area. The said lake is a part of Survey No.159/6 and a part of Kurukkupatti Village in S.No.17 and 82/1. The said lake is currently receiving water from Tharamangalam lake and now it is full of water and the water is going to Thuttampatti lake. This Tharamangalam – Kurkuputty lake water is the only water sources of Taramangalam Municipality new wards 10, 19, 20, 21, 22, 27.

Adjacent to the S.No.159 in Village natham land, the Panchayat Union Primary School is functioning in the said East Bhavadi with about 200 school students. Anganwadi Center is also functioning for the education of small children in the Anganwadi center adjacent to the said school. Teachers and staff are working in the said school and the center. Adjacent to the said East Bhavadi are all the public residences and commercial establishments.

In the above situation, on 30.08.2022, Taramangalam Municipality has passed a resolution to set up a new micro compost Yard under the Solid Waste Management system in Survey No.159/7. According to resolution passed by the municipality that the garbage will be dumped next to the lake, and it will be grind into powder and made into compost.

Recently, The Pollution Control Board has fined Avadi Municipality and Chennai Corporation Rs 24 Lakh for dumping solid waste in Ambattur Lake and causing pollution.

The area around 200 meters from the shore of the said lake is the Buffer Zone. Pollution of any water bodies in the said area the municipal administration should provide security without causing damage.

But the municipal administration has passed a resolution to construct a solid waste management building against the rules, which is an illegal act. Resolution Dumping of solid wastes along the said lake will cause pollution of the lake water level and render the lake water unusable. Also our well water and borehole water will get polluted. Even when the garbage is crushed by the said solid waste management building, the air becomes polluted and our health as a public is

affected. More garbage and due to the dust, our handloom, power loom textile thread and clothes get dirty and damaged and we will face great hardship and loss.

- In several judgments of the Green Tribunal, the municipal administration should protect rivers, lakes and ponds from pollution. While it is necessary to provide adequate protection to the lives of the public without disease, now a decision has been taken to build a solid waste management building in the residential area, there is a great threat to our lives, affecting our livelihood. Construction of the said building. I inform you that if the garbage is dumped or grinded and the air and water are polluted. Our families will get sick and die, and our places will become like the Tharamangalam burial ground.

The Hon'ble Apex Court as well as various Hon'ble High Courts including the Hon'ble High Court of Madras and the National Green Tribunal (both the Principal Bench and this Bench) in several decisions had reiterated the responsibility of the State to protect environment which includes protection of water bodies as mandated under Article 48A of the Constitution of India. Further, providing clean water and environment is part of Right to Life as enshrined under Article 21 of the Constitution of India which is also the primary responsibility of the State and its machineries to provide to its subjects. Any latches on the part of the state machineries in protecting environment will indirectly result in health hazard, affecting the health of the people as well. So, it is a duty of the Government and its instrumentalities to give priority in taking steps both infrastructure and technical for the purpose of protecting environment and thereby, they can discharge their constitutional obligation as provided under Article 21 and Article 48 A of the Constitution of India.

Further, fundamental duty is cast on every citizen under Article 51 A (g) of the Constitution of India to protect environment and the citizen's responsibility collectively to implement is on the State machinery and failure of discharge of that duty will amount to failure to discharge of constitutional obligation to protect environment by the official of the State instrumentalities.

The Tharamangalam Municipality does not follow the order, in Original Application No. 606 of 2018, the Principal Bench of National Green Tribunal, New Delhi has taken on Pan India basis regarding the implementation of Solid Waste Management Rules, 2016 and Liquid Waste Management in all the States / Union Territories.

Before the National Green Tribunal in OA No. 11 of 2022 (SZ), filed by one C.Sengodan S/o Chinnapan 4/5/5A Keel Chinnagoundampatti, New 26th Ward, Tharamangalam Municipality, Salem District and Anr., against the Tharamangalam Municipality, the order was passed on 22.03.2022. In that case the previous Commissioner Mr. Mangayarkkarasan of Municipality given report on 22.03.2022 by the way of affidavit before the Green Tribunal in page no 3 of the order state that "It is

important to note that, we sent further proposal to the District collector of Salem on 07.01.2022 request for allocation of land at R.S.No.11/1 and 11/2 to the extent of 3.13.1 hectares, in order to establish new waste site with micro compost plant".

But as against the undertaking the Tharamangalam Municipality passed resolution adjoining the lake in S.No.159/6 in the middle of residential area. The Municipality undertake one place, but wrongly selected the Buffer Zone. Without following the procedure in the Solid Waste Management system procedure, they simply passed resolution.

Schedule III (see rules 6 (1) and (3), 7 (2) Specifications for Landfill Sites Site Selection, the landfill site shall be away from habitation clusters, forest areas, water bodies monuments, National Parks, Wetlands and places of important cultural, historical or religious interest. A buffer zone of no-development shall be maintained around landfill site and shall be incorporated in the Town Planning Department's land-use plans. The Basic Requirements for selection of landfill sites Minimum siting distance 200 meters from the Water Bodies (rivers, lakes). The same was not followed by municipality Counsel.

I have sent complaint on 05.09.2022 through Registered post to the Government officials and local body respondents. I have sent through mail on 07.09.2022. But till date there is no action in my complaint. On 13.10.2022 Tharamangalam Municipality started the work in construction of two compost yards without consent from the Pollution Control Board.

Therefore, I humbly request you goodself to issue proper order to stop the new micro compost Yard under Solid Waste Management in the (residential area) S.No.159/7 adjoining to Tharamangalam – Kurukuppatti lake in S.No. 159/6 and take appropriate action against the respondents and protect our livelihood." என புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் தாரமங்கலம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

தாரமங்கலம் நகராட்சி ஆணையாளர் தனது 31.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியின் மொத்த பரப்பளவு 9.72 சதுர கிலோ மீட்டர் ஆகும். மொத்த வீடுகள் 8840 ஆகும். இவற்றில் சராசரியாக நாள் ஒன்றிற்கு 8.700 மெட்ரிக் டன் குப்பைகள் உற்பத்தி ஆகிறது. இதில் மக்கும் குப்பை 4.500 மெட்ரிக் டன் மற்றும் மக்காத குப்பை 4.200 மெட்ரிக் டன் ஆகும். மேற்படி காய்கறி கழிவுகள் போன்ற மக்கும் கழிவுகளை

ஈ.எம்.சொல்யூசன் கொண்டு பதப்படுத்தி உரம் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நுண் உயிர் உர மையம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் 25.07.2022 நாளிட்ட கடிதத்தில், தாரமங்கலம் நகராட்சியில் தூய்மை இந்தியா (2.0) திட்டத்தில் நுண் உயிர் உர மையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நுண் உயிர் உர மையம் அமைக்க ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட தாரமங்கலம் நகராட்சி எண் 11/1, 11/2–ல் போடுகால் தரிசு என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்ய கோரப்பட்டதில், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தல ஆய்வு செய்தபோது ஏரி வழித்தடமாக இருந்ததால், அவ்விடத்தில் நுண் உயிர் உர மையம் அமைக்க வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் புதிய அலுவலக கட்டிடம், அறிவுசார் மையம் மற்றும் புதிய சமுதாய கழிப்பிடங்கள் போன்ற பல்வேறு திட்டப்பணிகள் தாரமங்கலம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான 20–வது வார்டு கிழக்கு பாவடி பகுதியில் சர்வே எண் 159/7–ல் ஏற்கனவே மூன்று சமுதாய கழிப்பிடம் பின்புறம் உள்ள இடத்தில் நுண் உயிர் உர மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது.

அதன்படி தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான 20வது வார்டு கிழக்குபாவடி பகுதியில் சர்வே எண் 159/7–ல் தூய்மை இந்தியா (2.0) திட்டத்தின் கீழ் நுண் உயிர் உர மையம் – 2 எண்ணிக்கை தலா 3 மெட்ரிக் டன் எடை மொத்தம் 6 மெட்ரிக் டன் அளவில் ரூ 69.00 லட்சம் மதிப்பீட்டில் (Central Govt share ரூ 34.50 இலட்சம் + State Govt, share ரூ 22.77 இலட்சம் + நகராட்சியின் பங்கு தொகை ரூ 11.73 இலட்சம்) பணிகள் மேற்கொள்ள தாரமங்கலம் நகராட்சி நகர் மன்றத்தில் தீர்மான எண்.181, 182 நாள் 30.08.2022–ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் இடத்தை தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து ஆய்வு செய்யப்பட்டு தாரமங்கலம் நகராட்சி அலுவலக கடித ந.க.எண்.640/2020/அ1 நாள் 20.09.2022–ன்படி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மனுதாரரான திரு.சாமிநாதன் என்பவர் தாரமங்கலம் நகராட்சிக்கு தமிழக அரசால் வழங்கப்படும் பெரும்பாலான திட்டங்களை செயல்படுத்துவதற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துவருகிறார்.

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண் 26 கீழ்சின்னாகவுண்டம்பட்டி பகுதியில் சர்வே எண் 244/3–ல் மயானம் என்று வகைப்பாடு செய்யப்பட்ட 5.30 ஏக்கரில் பொதுமக்களின் நலன் கருதி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023 ஆம் ஆண்டு திட்டத்தில், இறந்தவர்களின் உடல்களை எரிப்பதற்கு புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்க அரசிடமிருந்து ரூ 144.50/– இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு நகராட்சியின் அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த நினைவு மேடைகளை அகற்றுவதற்கு

மனுதாரரான திரு.சாமிநாதன் என்பவரால் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நகராட்சியின் சார்பில் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கு 30.09.2022 ஆம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்காணும் அதே இடத்தில் புதிய எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதன் காரணமாக நகராட்சிக்கு எதிராக தகவல் அறியும் உரிமை சட்டம் 2005–ன் கீழ் சுமார் 250 கேள்விகளுக்குமேல் கேள்விகளை தனது பெயரிலும் தனது மனைவியின் பெயரிலும் எழுப்பி நகராட்சி நிர்வாகத்தை செயல்படவிடாமல் தடுத்து வருகின்றார்.

இந்நிலையில் 20வது வார்டு கிழக்கு பாவடி பகுதியில் சர்வே எண் 159/7–ல் நுண் உயிர் உர மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தின் அருகில் மனுதாரர் திரு.சாமிநாதன் என்பவர் அவருக்கு சொந்தமான இடத்தில் கார்மெண்ட்ஸ் தொழிற்சாலைகள் இருப்பதால், இப்பணியினை நிறுத்துவதற்கு பல்வேறு வகையில் முயற்சி செய்து வருகிறார்.

திடக்கழிவு மேலாண்மை 2016 – திட்டத்தின் கீழ் நுண் உயிர் உர மையம் மூலம் மக்கும் குப்பைகளை உரமாக மாற்றும் பணி தமிழகத்தில் பல்வேறு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளவாறு, நுண் உயிர் உர மைய திட்டத்தில் காற்று மாசுபாடு மற்றும் நீர் மாசுபாடு ஏதும் ஏற்படுவதில்லை.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் அனுமதி பெற்று நுண் உயிர் உர மைய திட்டம் செயல்படுத்தபடுவதும் மற்றும் ஆண்டுதோறும் அனுமதி புதுப்பித்தும் திட்ட செயலாக்கம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் பயன்பாட்டினை அறியாமல் அப்பகுதி மக்கள் சிலரது தூண்டுதல்களின் பெயரில் இத்திட்டத்தினை அப்பகுதியில் செயல்படுத்துவதற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்தனர்.

இத்திட்டத்தினை செயல்படுத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நோக்கிலேயே மாற்று இடமாக தாரமங்கலம் நகராட்சி வார்டு எண். 26 சர்வே எண் 244/3–ல் உள்ள மயானத்தில் ஏற்கனவே உள்ள குப்பைகளை நுண்ணுயிர் செயலாக்க முறையில் அகற்றும் பணி, புதிய எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்திய இடம் போக மீதம் உள்ள இடத்தில் நுண்ணுயிர் உர மையம் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தாரமங்கலம் நகராட்சி நகர் மன்றத்தில் தீர்மான எண்.258(50) நாள் 19.10.2022–ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 20.10.2022 ஆம் தேதிய தாரமங்கலம் நகராட்சி அலுவலக கடிதம் மூலம் மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு, மேற்காணும் இடத்தில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் தாரமங்கலம் நகராட்சி ஆணையரும் 03.11.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. A. சாமிநாதன், 03.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"எனக்கு சொந்தமான இடம் தாரமங்கலம் கிராமம் சர்வே எண் 159.3பி2 என்கின்ற இடத்தில் உள்ளது. எனது நிலம் அமைந்துள்ள இடம் குடியிருப்புப் பகுதி என வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனது நிலத்திற்கு அருகே நீர் ஆதார பகுதியான தாரமங்கலம் – குறுக்குப்பட்டி ஏரியையொட்டி தாரமங்கல நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தாரமங்கலம் நகராட்சி சார்பில் திடக்கழிவு மேலாண்மை அமைப்பின் கீழ் புதிய மைக்ரோ கம்போஸ்டு யார்டு (MCC)அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்கு புறம்பாக அங்கு மேற்கண்ட கம்போஸ்டு யார்டு கட்டடம் கட்ட பூமி பூஜை போடப்பட்டு கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட கட்டடம் கட்ட நகராட்சியால் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் NOC பெறப்பட்டதா என்கின்ற விவரம் தெரியவில்லை. மேற்கண்ட இடத்திற்கு அருகே ஜவுளி தொழிற்சாலைகளும், பொதுமக்களின் குடியிருப்புகளும் அமைந்துள்ளன. மேற்கண்ட கம்போஸ்டு யார்டு அமைக்கப்பட்டால் அங்கு ஏற்படும் மாசுவின் மூலம், அங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு சுகாதாரப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாரமங்கலம் நகராட்சியால் கம்போஸ்டு யார்டு அமைக்கும் இடத்திற்கு அருகில் பாசன ஏரி உள்ள நிலையில், மேற்கண்ட இடத்தில் நகராட்சியால் கம்போஸ்டு யார்டை திடக்கழிவு மேலாண்மை விதிகளை மீறி விதிகளுக்கு புறம்பாக அமைத்திட வேண்டாம் எனவும், அங்கு வசிக்கும் மக்களின் சுகாதாரத்தை பேணும் பொருட்டு, மேற்கண்ட இடத்தைத் தவிர வேறு இடத்தில் கம்போஸ்டு யார்டு அமைக்கும்படியும் இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்படும் எனது 03.11.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான தாரமங்கலம் நகராட்சி ஆணையாளர் 03.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் நுண்ணுயிர் உர மையம் (MCC) அமைக்க நகராட்சியால் முடிவு செய்யப்பட்டது. ஆனால் பொதுமக்களின் எதிர்ப்பையொட்டி அந்த இடத்தில் நுண்ணுயிர் உர மையம் அமைத்திட வேண்டாம் என தாரமங்கலம் நகர்மன்ற தீர்மானத்தின்படி மேற்கண்ட உர மையம் அமைக்க வேறு இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் தாரமங்கலம் நகராட்சி சார்பில் நுண்ணுயிர் உர மையம் அமைப்பது கைவிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், மேலும் மேற்கண்ட உர மையம் வேறு இடத்தில் அதாவது 500 மீட்டருக்கும் மேலான தொலைவில் உள்ள தாரமங்கலம் வார்டு எண் 26 சர்வே எண் 244/3ல் உள்ள மயானத்தில் ஏற்கனவே உள்ள குப்பைகளை நுண்ணுயிர் செயலாக்க

முறையில் அகற்றும் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்திய இடம் போக மீதமுள்ள இடத்தில் உர மையம் அமைக்க நகர் மன்றத்தில் 19.10.12022 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் மாற்று இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு 20.10.2022 அன்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு மேற்கண்ட இடத்தில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 31.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தாரமங்கலம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்தின்போது மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட 03.11.2022 நாளிட்ட மனு ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- சேலம் மாவட்டம், தாரமங்கலம் நகராட்சியைச் சேர்ந்த மனுதாரர் திரு. A.சாமிநாதன் என்பவர் தனது 14.10.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 20வது வார்டு கிழக்குபாவடி பகுதியில் குறுக்குப்பட்டி ஏரி அருகில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நுண்ணுயிர் உர மையம் தாரமங்கலம் நகராட்சியால் அமைக்கப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரியுள்ளார்.

- தாரமங்கலம் நகராட்சியில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின்கீழ், நகராட்சியால் உற்பத்தியாகும் மக்கும் குப்பைகளை கூழாக்கி உரம் தயாரிக்கும் வகையில் நுண்ணுயிர் உரமையத்தினை ரூ 34.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்குட்பட்ட 20வது வார்டு, கிழக்குபாவடி பகுதியில் (சர்வே எண். 159/7) அமைத்திட 30.08.2022 அன்று நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு திட்டத்தினை செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- தாரமங்கலம் நகராட்சியில் கிழக்குபாவடி, சர்வே எண் 159/7–ல் நுண்ணுயிர் உர மையம் அமைக்க இடம் தெரிவு செய்யப்பட்டு நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தற்போது பல்வேறு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தங்களது எல்லைக்குட்பட்ட இடங்களில் பொது மக்களுக்கும், நீர்நிலைகளுக்கும் எவ்வித சீர்கேடின்றி பாதுகாப்பாக நுண்ணுயிர் உரமையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பது நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது. இதனால் தாரமங்கலம், கிழக்குபாவடியில் (சர்வே எண் 159/7–ல்) நுண்ணுயிர் உர மையத்தினை அனைத்து பாதுகாப்புடன் அமைப்பதால் எவ்வித

சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட வாய்ப்பில்லை என்பது ஆணையரின் அறிக்கை மூலம் தெரியவருகிறது.

- இருப்பினும் தாரமங்கலம் கிழக்குபாவடியில் (வார்டு எண்.20) நுண்ணுயிர் உரமையம் அமைப்பதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக, இத்திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில் மாற்று இடமாக தாரமங்கலம் நகராட்சி வார்டு எண் 26, கீழ்சின்னகவுண்டம்பட்டியில் சர்வே எண். 244/3–ல் உள்ள குடியிருப்புகளின் பகுதியிலிருந்து 500 மீட்டருக்கும் மேலாக தொலைவில் உள்ள மயானத்தில் ஏற்கனவே உள்ள குப்பைகளை நுண்ணுயிர் செயலாக்க முறையில் அகற்றும் பணி, புதிய எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்திய இடம் போக மீதமுள்ள இடத்தில் நுண்ணுயிர் உரமையம் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தாரமங்கலம் நகராட்சி நகர்மன்றத்தில் 19.10.2022 (தீர்மான எண் 258/50) அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாற்று இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தாராமங்கலம் நகராட்சி அலுவலக கடித நாள் 20.10.2022 மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளதையும் ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது.

- இந்நிலையில் தாரமங்கலம் நகராட்சியில் வார்டு எண் 20, குறுக்கு பாவடியில் நுண்ணுயிர் உர மையம் அமைப்பதற்கு பதிலாக 26வது வார்டு கீழ்சின்னகவுண்டம் பட்டியில் சர்வே எண் 244/3–ல் நகராட்சிக்கு சொந்தமான மயானத்தில் நுண் உயிர் உர மையம் அமைய உள்ள நிலையில், தாரமங்கலம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையை ஏற்று இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A.சாமிநாதன்,
க.எண். 18–A, தெற்கு ரத வீதி, தாரமங்கலம் 636 502,
சேலம் மாவட்டம்.

2) ஆணையாளர், தாரமங்கலம் நகராட்சி,
சேலம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
சேலம் – 636 007.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
சென்னை–600 032